## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 79/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.** 1 |
| Name | : | **சத்தியா** |
| Father's / Husband Name | : | **பாலகிருஷ்ணன்** |
| Address | : | **விளாமுத்தூர்** |
| Age | : | 33/2025 |

**தேதி : 10.03.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கம்பி விற்கும் கடையில் வேலை பார்க்கிறேன். கடந்த 24.05.2023 அன்று என் தம்பிக்கு திருமணம் நடைபெறயிருந்ததால் நான் 20.05.2023 அன்றே அரியலூர் மாவட்டம் அருங்கால் கிராமத்திற்கு சென்றுவிட்டேன். எனது கணவரும் கடந்த 21.05.2023 அன்று அரியலூருக்கு வந்துவிட்டார். நான் 22.05.2023 அன்று என்தம்பிக்கு நலுங்கு வைத்துவிட்டு பெரம்பலூர் எழில் நகரில் உள்ள எனது வீட்டிற்கு பகல் 1.00 மணிக்கு வந்தபோது வெளிப்புற கதவில் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. பக்கத்திலிருப்பவர்களை உதவிக்கு அழைத்தேன். அவர்களுடன் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டிருந்தது.

நான் பீரோவில் வைத்திருந்த 2 1/2 பவுன் நெக்லஸ் 1, 1 1/2 பவுன் செயின் 1, 1 பவுன் செயின் 1, பணம் ரூ. 50,000/- ஆகியவற்றை காணவில்லை. பின்னர் இதுசம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுநான் கொடுத்ததுதான். **புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 25.05.2023 அன்று மறுபடியும்போலீஸார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். நான் காலை 10.00 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். காணாமல் போனதாக சொன்ன நகைகளையும், பணத்தையும் திருடிய நபரை பிடித்துவிட்டதாக சொல்லி அவரை அடையாளம் காட்டினார்கள். அவரது பெயர் மணிகண்டன் என்று சொன்னார்கள். பணம் ரூ. 50,000/- த்தை திருடிய நபர் செலவு செய்துவிட்டதாகவும், நகைகளை உறுக்கி 1 பவுன் தங்க கட்டிகளாக மாற்றி வைத்திருப்பதாக போலீஸார் சொன்னார்கள். போலீஸார் நீதிமன்றத்தில் ஒப்படைத்த ஒரு பவுன் வீதம் 3 தங்ககட்டிகளை நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்ககட்டிகள் நான் நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்டதுதான். **புகைபடம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள். போலீஸார் என்னிடம் அடையாளம் காட்டிய நபரை மறுபடியும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

<u>குறுக்கு விசாரணை</u>

என்னுடைய வீட்டிற்கு அருகில் ஒரே ஒரு வீடு உள்ளது. அதில் ராஜேஷ் என்பவர் குடியிருக்கிறார். என்னுடைய வீட்டில் இருந்த நகை மற்றும் பணத்தை யார் எடுத்துசென்றார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. என்னுடைய தம்பிக்கு நலுங்கு வைத்துவிட்டு வேல்முருகன் ஆசாரி கடையில் தாலிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு என்னுடைய வீட்டிற்கு 22.05.2023 அன்று மதியம் 1.00 மணிக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் வீட்டிற்கு சென்ற அன்றுதான் என்னுடைய வீட்டின் கதவில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டு நகைகளும், பணமும் திருடப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். எனக்கு எழுத, படிக்க தெரியும்.

திருடு போன அன்று போலீஸார் என்னுடைய வீட்டிற்கு 1.30 மணிக்கு வந்தார்கள். அப்போது நான் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகாரை நான்தான் எழுதினேன். புகாரை படித்து பார்த்துதான் நான் கையெழுத்து போட்டேன். அந்த புகார் மனுவில் 22.05.2023 அன்று திருடு போனதாக குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு நான் காவல் நிலையத்திற்கு 25.05.2023 அன்று சென்றேன். போலீஸார் என்னை விசாரித்தபோது 25.05.2023 அன்று காவல் நிலையத்திற்கு சென்றேன் என்று சொன்னேன் என்றால் சரிதான்.

போலீஸார் எனக்கு போன் மூலம் தகவல் சொல்லி 25.05.2023 அன்று காவல் நிலையத்திற்கு சென்றேன். நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லைஎ ன்றாலும், எதிரியை பார்க்கவில்லை என்றாலும், போலீஸார் சொல்லிக்கொடுத்ததன் ் பேரில் காவல் நிலையத்திற்கு சென்றதாகவும், எதிரியை பார்த்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மதமில்லை என்றாலும் போலீஸார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன்என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.